12.12.2024

அசல் வழக்கு எண்: 205/2017

வா.சா.1 சாட்சி அழகுசுந்தரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலம் தயார் செய்ய வழக்கறிஞருக்கு தகவல் சொன்னது நான்தான் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தது செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் பெருமாள்நாயக்கர் பெயரில் இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் அனைத்து சொத்துக்களும் எனது அப்பா பெயரில் இருந்தது. சுமாராக எத்தனை இலக்க சொத்துக்கள் பெருமாள்நாயக்கர் பெயரில் இருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

பெருமாள்நாயக்கருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 வாரிசுகள் ஆகும். பெருமாள்நாயக்கர் எந்த ஆண்டு காலமானார் என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள்நாயக்கர் 50 வருடங்களுக்கு முன்பாகவே காலமாகிவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அதனால் பெருமாள்நாயக்கர் பெயரில் என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

அவர் இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை யார் யார் அனுபவம் செய்தார்கள் என்றால் எனது பாட்டிகள் பெருமாளம்மாள், செல்லம்மாள் மற்றும் பெரியபாப்பா என்ற அழகம்மாள் மற்றும் எனது தகப்பனார் அழகர்சாமி ஆகியோர்கள் அனுபவம் செய்தார்கள். மேற்படி அனைவரும் கூட்டாக அனுபவம் செய்தார்கள் என்றால் சரிதான். எந்த வருடம் வரை கூட்டாக அனுபவம் செய்தார்கள் என்றால் தற்போது வரை கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்துக்களில் செல்லம்மாளுக்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். செல்லம்மாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சொத்து வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அதனால் சேர்க்கவில்லை. அவர் சொத்து வேண்டாம் என்று சொன்ன விபரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். செல்லம்மாள் என்பவர் தனக்கு சொத்து வேண்டாம் என்று சொல்லவில்லை என்றாலும் மேற்படி விபரத்தை பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. செல்லம்மாளை வழக்கில் சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. செல்லம்மாள் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக செல்லம்மாள் இறந்தாரா அல்லது பின்பாக இறந்தாரா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இறந்தார்.

செல்லம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 வாரிசுகள் ஆகும். அவர்கள் பெயர்கள் என்ன என்றால் அழகர்சாமி மற்றும் குருசாமி ஆகும். மேற்படி நபர்களுக்கு வயது என்ன இருக்கும் என்றால் குருசாமி

என்பவருக்கு 58 வயது ஆகும். அழகர்சாமி என்பவருடைய வயது தெரியவில்லை. மேற்படி இருவரும் கூட்டுகுடும்ப சொத்தில் பாகம் வேண்டாம் என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். சொத்து வேண்டாம் என்று விடுதலை பத்திரம் எதுவும் எழுதி பதிந்து கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. மேற்படி நபர்கள் பாகம் வேண்டாம் என்று சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்கிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ செல்லம்மாள் பற்றியோ அவரது வாரிசுகள் பற்றியோ எந்த விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 05.10.2007ம் தேதி கண்ணம்மை என்பவருக்கு 1ம் பிரதிவாதி மற்றும் 1, 2 வாதிகள் சேர்ந்து ஆவண எண்.6266/2007 என்ற ஆவணத்தை பதிவு செய்து கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் எதுவும் கொடுக்கவில்லை. நான் கிரையம் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 05.10.2007ம் தேதி மேற்படி கண்ணம்மை என்பவருக்கு மேற்படி நபர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ8 கிரைய ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான என்றால் என்னுடைய கையெழுத்துதான். ஆனால் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை.

எனது கணவர் பெயர் மலைச்சாமி என்றால் சரிதான். அவரது கையெழுத்தை பார்த்தால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் தமிழில் கையெழுத்து போடுவாரா அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவாரா என்றால் பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் கையெழுத்து போடுவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 8 ஆவணத்தில் கண்ட 2வது சாட்சி கையெழுத்து எனது கணவருடையதா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ8 கிரைய ஆவணத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 8 ஆவணத்தில் கண்ட சொத்து பெருமாள்நாயக்கருக்கு சொந்தமான சொத்து இல்லை என்றாலும் குருவம்மாள் என்பவருடைய சொத்து என்றாலும் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து வாக்கரளாக பிரிக்கப்பட்டு 1, 2 வாதிகள் அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு என்னென்ன சொத்துக்களை வாக்கரளாக ஒதுக்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2 வாதிகளுக்கு என்னென்ன சொத்துக்களை ஒதுக்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாள்நாயக்கர் பெயரில் இருந்த சொத்துக்களுக்கு தற்போது யாருடைய பெயரில் ஆவணங்கள் ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்கள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் பெயரில் என்னென்ன சொத்துக்களுக்கு ஆவணங்களை பார்த்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பெருமாள்நாயக்கர் பெயரில்

ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூத்ததாரத்திற்கு நான் ஒருவர் மட்டுமே வாரிசு. 2வது தாரத்தின் பெயர் என்ன என்றால் ராமுத்தாய் ஆகும். ராமுத்தாயிக்கு எத்தனை மக்கள் என்றால் 3 மக்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் என்ன என்றால் அழகுலெட்சுமி, கீர்த்தி மற்றும் நாகராஜ் ஆகும். ராமுத்தாய் மற்றும் அவரது வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததற்கு காரணம் எதுவும் உள்ளதா என்றால் எனது அப்பா மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதனால் சேர்க்கவில்லை. ராமுத்தாய் மற்றும் அவரது வாரிசுகளுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றாலும் அவர்களை இந்த வழக்கில் சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களை அவர் தனிப்பட்ட முறையில் 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துள்ளரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எனக்கு தானம் எதுவும் எழுதிகொடுத்துள்ளாரா என்றால் எழுதி கொடுத்துள்ளார். எனக்கு எத்தனை இலக்க சொத்துக்களை எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 33 செண்டை எழுதிகொடுத்துள்ளார். 33 செண்டை தானம் எழுதிகொடுத்துள்ள விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராமுத்தாய் என்பவருக்கு சொத்து எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து 3ம் நபருக்கு கிரையம் எதுவும் எழுதிகொடுத்துள்ளோமா என்றால் இல்லை. 33

சென்டை எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்டு ஆவணத்தை எனது தகப்பனார் மட்டும்தான் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான். நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து கவிதாசீனிவாசன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இதே போன்று பிற சொத்துக்களையும் நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது எனது தகப்பனார் யாருடன் இருக்கிறார் என்றால் 2வது தாரமான ராமுத்தாய் என்பவருடன் இருக்கிறார்.

எனது தகப்பனார் பாண்டியராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் கிரையம் கொடுத்த விபரம் தெரியாது. மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ9 ஆவணத்தில் கண்ட பாண்டியராஜன் என்பவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)